DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 35/2015
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW7 (LW9)
Defence

Name : Deventhiran

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 03rd February 2026

எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் 2024 ஆம் வருடம் கோட்டக்குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 24/06/2014 அன்று கிளியனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் தெய்வசிகாமணி

த/பெ.கோவிந்தசாமி கவுண்டர், தைலாபுரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலையக்குற்ற எண். 273/2014 ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுந்தரவேல் மற்றும் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றம் பார்வை மகசர் தயார் செய்தேன். **அந்த பார்வைமகசர் அ.சா.ஆ-7 மாதிரி வரைபடம் அ.சா-ஆ. 8 ஆகும்.** பின்னர் சாட்சிகள் தெய்வசிகாமணி, ரவிசந்திரன், பெருமாள்கிராமணி, ஐயப்பன், சுப்பிரமணி, முற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணைசெய்து வாக்கமூலம் பதிவுசெய்தேன். வழக்கின் முதல்கட்ட விசாரணை முடித்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி. கீதா அவர்கள் பார்வைக்கு வழக்கு கோப்புகளை வைத்தேன்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவம் 21/06/2014 என்றால் சரிதான். காயம்பட்ட சாட்சிகள் தெய்வசிகாமணி மற்றும் ரவிசந்திரன் ஆகியோர் மருத்துவமனை சென்ற சிகிச்சை பெற்ற பின்னர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மூன்று நாட்கள் கழித்து 24/06/2014 காலை 11.00மணிக்கு தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடம் வாதியின் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த வரைபடத்தில் சம்பவ இடம் முதல் எதிரியின் உழவுநிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த வரைபடத்தில் சவுக்குதோப்புஉள்ளதா என்றால் குறிப்பிட்டு காட்டவில்லை.

புகார்தாரர் தனது புகாரில் எதிரிகள் என்ன அருவருக்கதக்க வார்த்தைகளால் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் அதேபோல் எந்த எதிரி தன்னை உடம்பில் எந்த இடத்தில் தாக்கினார் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேலும் புகார்தாரர் தனது புகாரில் எதிரிகள் எந்த ஆயுதத்தை வைத்து மிரட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களுக்கு சொற்பகாயமா அல்லது கொடுங்காயம் ஏற்ப்பட்டதா என்று தெரியாத போது இதச பிரிவு 324-ன் கீழ் வழக்கு பதிவுசெய்துள்ளது தவறானது என்றால் சரிதான்.

புகார்தாரர் தனது புகாரிலும் எனது விசாரணையிலும் 21/04/2014 அன்று எதிரிகள் காலை 11.00 மணியளவில் 30, 40 ஆட்களை வைத்து 20 டன் சவுக்கை வெட்டிவிட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சி ரவிச்சந்திரன் தனிப்பட்ட முறையில் புகார்எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சி ரவிச்சந்திரன் எனது விசாரணையில் மரம்வெட்டுவதை கேட்டதற்கு எனது அப்பாவை பலராமன் பிடித்து தள்ளினார் என்றும், மகேந்திரன் மற்றும் பலராமன் இருவரும் சவுக்கு தடியால் என்னை இடுப்பில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சிகள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் ஓய்வு பெற்ற நிலஅளவையர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று சரிவர சாட்சிகளை விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்

அரசுதரப்பு சாட்சிகளுக்கும் நிலத்தகராறு உள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் அ.சா.1 எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஓம்/-)XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்